Register as a N
paper Ceylon
P. M. G. NO. N. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு வரு ஐப்பசிமீ உருவ (1943 நவம்பர்மீ 11 வியாழக்கிழமை) [இல. சுO

## சத்துருவின் பலமான பாதுகாப்பு அரண்

### சாங்ரோவுக்கு ஐந்து மைல் தூரத்திற்குள் 8-வது சேனை

வட ஆப்பிரிக்கா, நவ 8

நேசதேசராணுவத் தலைமைக்காரியாலயத்திலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:-

ஜெனரல் மாண்ட்கொமெரியின் வலதுபாரிசத்தின் துருப்புகள் குன்றுகளிலுள்ள கிராமங்களைக் கைப்பற்ற சாங்ரோ பள்ளத்தாக்கைக் கீழ்நோக்கியுள்ள குன்றுகளின் ஓரமாக அணிவகுத்து நிற்கின்றன. பெஸ்காராவிற்குச் செல்லும் ரஸ்தாவிற்குப் பாதுகாப்பாகவுள்ள நதி இப்பள்ளத்தாக்கின் வழியாகச்செல்கிறது. சாங்ரோவிலிருந்து ஐந்து மைல் தூரத்திற்குள் எட்டாவது சேனை இருக்கிறது. அதற்கு எதிரில் இதுவரை நமது துருப்புகள் கடந்திராத பெரிய நதி இருக்கிறது.

இத்தாலியின் மறுபக்கத்தில் காய்டா துறைமுகத்தைக் காலிசெய்ய ஜெர்மானியர் தயாராகின்றனரென்று தெரிகிறது. கெய்டா துறைமுகத்திலிருந்து வளைகுடா வழியாக ஒன்பது மைல் தூரத்திலுள்ள ஐந்தாவது சேனையின் நேசத் துருப்புகள் கெய்டா துறைமுகத்திலிருந்து எழும் வெடிச் சப்தத்தைக் கேட்க முடிகிறது. நேப்பிள்ஸை நாஜியர் காலிசெய்வதற்கு முன்பு இம்மாதிரியான சப்தங்கள் கேட்டன.

உள்நாட்டில் ஜெனரல் கிளார்க்கின் துருப்புகள் மிக்னுேவிற்கு ஐந்துமைல் தூரத்திலிருக்கும் காலாபிரிட்டே என்னும் சிறிய கிராமத்தை அணுகின.

அபினைன் மலைப் போர்முனையின் மத்தியபாகத்தில் ஜெனரல்மாண்ட்கொமெரியின் வலது பாரிசம் ஜெர்மன் பாதுகாப்பு அரணில் முக்கோணவடிவத்தில் ஒருபிளவை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜெனரல் அலெக்ஸாண்டரின் மூன்று படைகளும் இத்தாலியில் முன்னேறுகையில் நேசதேச வெடிகுண்டு விமானங்கள் சத்துரு பிரஸ்தித் தளங்களையும் ரயில் போக்குவரத்துகளையும் தாக்கி வருகின்றன. நமது மத்தியரக வெடிகுண்டு விமானங்கள் கடந்த 24மணிநேரத்தில் இத்தாலியின் கீழ்க்கரையிலுள்ள அன்கோனு துறைமுகத்தைப் பலமாகத் தாக்கியிருக்கின்றன.

### பான்டைன் பிரதேசம் வெள்ளத்திற் குள்ளாகலாம்

வட ஆபிரிக்காவிலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:—

கெய்டா துறைமுகத்தை நாசம் செய்துவரும் ஜெர்மன் மேற்குக் கடற்கரைத் துருப்புகள் ரோமாபுரிக்குப் பின்வாங்குமுன் பான்டைன் சதுப்பு நிலத்தில் வெள்ளப்பெருக்கெடுத் தோடும்படி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அவ்வேலையை ஜெர்மானியர் இன்னும் ஆரம்பிக்கவில்லை. கெய்டா வளைகுடாவை ஐந்தாவது சேனை கடந்தவுடன் ஜெர்மானியர் பான்டைன் பகுதியை வெள்ளத்திற்குள்ளாக்க முயற்சி செய்வரோம். இப்பிரதேசத்தில் ஒவ்வொரு ஐந்துமைல் தூரத்திலும் கால்வாய்கள் இருக்கின்றன. தாங்கள் பின்வாங்குவதற்கான அத்தியாவசியமான ரஸ்தாக்கள் பல இப்பிரதேசத்தில் இருப்பதால்தான ஜெர்மானியர் இப்பிரதேசத்தை வெள்ளத்திற்குள்ளாக்கத் தயங்கிவருகின்றனர். ஐந்தாவது சேனைக்கு ஜெர்மானியரின் எதிர்ப்பு அதிகரித்துவருகிறது.

## ஜெர்மன் சர்வாதிகாரியின் பேச்சு

### கடைசிப்போரில் நம்பிக்கை

பின்வரும் ஹிட்லரின் பிரசங்கச் சுருக்கத்தை ஜெர்மன் செய்திஸ்தாபனம் உத்தியோக தோரணையில் வெளியிட்டது:—

"பைத்தியகாரத்தனமும் கொடுமையும் குடிகொண்ட எனது சத்துருக்களின் பிடிவாததனத்தை எதிர்த்து இன்று ஜெர்மனி உயிர் வாழ்வதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறது. ஜெர்மன் சமுதாயமும் அதன் வீரர்களும் அழிக்கமுடியாத ஒரு ஜெர்மனியை இன்று உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். தங்களிடையே துரோகிகள் தலையெடுக்க இடங்கொடாமலிருக்கும் அவர்கள் வெற்றிபெற்று அதன் பிறகு உயிர் வாழ உறுதிபூண்டிருக்கிறார்கள்"

யுத்தம் தோன்றிய காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஹிட்லர் கூறியதாவது:—

போல்ஷவிசமைப்பசாசைச் சாந்தப்படுத்துவதற்காக எல்லா ஆயுதங்களையும் பரிஹாரணம் செய்வதாகச் சத்தியம் செய்துகொடுப்பது சாத்தியமாயிருந்திருக்கும் என்று சிலர் நினைக்கிறார்கள். இந்தக் கூற்று கோழிக் குஞ்சும், வாத்துக் குஞ்சும் ஒன்றுசேர்ந்து, நரியின் நல்லபிப்பிராயத்தைப் பெற, அதை எப்போதுமே தாக்குவதில்லையென்று பிரகடனஞ் செய்வதற் கொப்பாகும். யூதர்களோடு பரிசுத்தமற்ற ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கும் இங்கிலாந்துதான் இந்த யுத்தத்தின் மூலசக்தியாக விளங்குகிறது. அது முதலாவது உலக மகாயுத்தத்தின் சரித்திரத்தையே மீண்டும் ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறது. அந்த முடிவு இரண்டு முறை ஏற்படமாட்டாது. 1943ம் வருட நவம்பர் 9ந் திகதி 1918ம் வருட நவம்பர் 9ந்திகதியைப்போன்றதல்ல"

'யுத்தம் ஆரம்பித்தபோது, கிழக்கிலிருக்கும் சத்துரு பெர்லினிலிருந்து 150 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருந்தான். மேற்கில் சத்துருவின் பீரங்கிகள் ஜெர்மன் எல்லைப்புறத்திலிருந்து குண்டுபொழியும் தூரத்தில் இருந்தன. ஆனால், இப்போதோவெனில் எல்லாப் பாகத்திலும ஜெர்மன் எல்லைபுறத்திலிருந்து 1000 கிலோ மீட்டர் தூரத்துக்கு தேசிய சமதர்ம ஆசாங்கம் சத்துருவை விரட்டியிருக்கிறது. நாம் இப்போது என்ன தியாகங்கள் செய்யவேண்டியிருப்பினும் யுத்தத்தில் நாம் தோறகடிக்கப்படின் நமக்கேற்படும் நஷ்டத்தோடு அவற்றை ஒப்பிட முடியாது. ஆதலின், யுத்தம் எங்கு நடைபெறினும் ஒவ்வொருவரும் தன்னுடைய சக்தி முழுவதையும் திரட்டிக்கொடுக்கவேண்டுமென்று நான் கேட்கிறேன்.'

'இத்தாலிய மன்னர், முடிவுக்குரிய இளவரசர், அவர்களுடைய சகாக்கள் ஆகியோரின் துரோகம் உண்மையிலேயே விகாரமான, கேவலமான ஒரு நிலைமையை ஏற்படுத்திவிட்டது. நிலைமையைச் சமாளிப்பதற்கு நாம் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டபின் நிலைமை சீர்திருந்திவிட்டது.'

### இத்தாலியச் சண்டை

இத்தாலியின் வீழ்ச்சி யுத்த நிலைமையையும் பாதிக்காமல் போகவில்லை. ஆனால், பிரென்னர் கணவாய்க்கு அவர்களால் துரிதமாக வந்துசேர முடியாது. புதிய இடங்களில் படைகளை இறக்குவதனால் சத்துரு நம்மிடம் தகுந்த பூசைக்காப்பு வாங்குவான். யுத்த அரங்கங்களில் நாம் வைத்திருக்கும் ரிசேவ் படையின் பலம் அப்போது நன்கு தெரியவரும். கிழக்கில நடைபெறும் போராட்டம்தான் ஜெர்மானியர் என்றுமே கேட்டிராத அவ்வளவு கஷ்டமான போராட்டமாகவிருக்கிறது. ஆனால், வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதுதான் இறுதிச் சண்டையாகும். அந்தச் சண்டையில் ஜெர்மானியர் வெற்றியடைவார்கள். சத்துருவின் பிரசாரம் சக்தியிழந்துவிடும். குளிர்காலம், பட்டினி, நீண்ட யுத்தம் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் பேசிவருகிறார்கள்.

வெடிகுண்டுகளினுல் காரியம் பலிக்குமென்று அவர்கள் நினைத்தார்கள். ஆனுல், ஒரு பெரிய சுமையைத் தாங்கியிருக்கும் ஒரு சமுதாயம் தனது எதிர்ப்பை ஒருபோதும் இழந்துவிடமாட்டாது. நேசதேசங்கள் ஏற்கனவே வெற்றியீட்டிக்கொண்டிருக்கின்றனவென்று சதா பிரசாரம் செய்து வருகிறார். ஆனுல் உண்மையென்னவென்றால் தங்களுக்குள்ளிருக்கும் பிளவுகளை அகற்றுவதற்காக மகாநாடுகளுக்கு மேல் மகாநாடுகளை நடத்தி வருகிறார்கள். யுத்தத்துக்குப்பிறகு உலகத்தை உருவாக்கும் வேலையில், ஈடுபட அவர்கள கமிட்டிகளை நியமிக்கிறார்கள். அவர்களுடைய தற்போதைய உலகத்தைப பற்றி அவர்கள் சிந்திப்பார்களாயின் மிக நன்றாக இருக்கும்.

அமெரிக்காவில் 1 கோடியே 30 லட்சம் பேர் வேலையில்லாது திண்டாடுகின்றனர். தனது வீட்டுக்கே எஜமானுக அதனுல் முடியாமலிருக்கிறது. நேசதேச வெற்றியால் தனக்கு ஒரு நல்ல எதிர்காலம் பிறக்குமென்று நினைக்கும் ஜெர்மானியன ஒருவனுவது இங்கிருப்பானென்று நான் நினைக்கவில்லை. தனது சமூகத்துக்கெதிராகஒருதுரோகிதான் நடவடிக்கை எடுத்துக்கொள்வான். இவர்களை எவ்வாறு நடத்தவேண்டுமென்பதை நாம் நன்கறிந்திருக்கிறோம்.

லட்சக்கணக்கான நமது சிறந்த தோழர்கள தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்து வருகையில் ஏனைய தேசங்களையும் அவ்வாறு செய்யும்படி உத்தரவிட நாம் பின்னிற்க மாட்டோம். துரோகிகளை அடியோடொழிப்பதற்கு நாம்எல்லா நடவடிக்கையையும் எடுத்துக்கொள்வோம்."

### விமான யுத்தம்

விமான யுத்தத்தைப்பற்றி அவர் பேசியதாவது:-

"குண்டு வீச்சின் காரணமாக ஜெர்மானியருக்கு அமோகமான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வெடிகுண்டு வீசும் யுத்தமுறையைக் கையாள வேண்டாமென்று என்னை வேண்டிக்கொண்டு அமெரிக்கத்தலைவர் எனக்கொரு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

"அடுத்த கட்சி தயாராவதற்கு அவகாசம் கொடுப்பதற்காகத்தான் இந்த வேண்டுகோள் என்பது இப்போது தெரிகிறது. ஜனங்கள் தங்களுடைய சொத்துகளை இழப்பது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. நமது கைத்தொழில்களையும் நகரங்களையும் நாசமாக்குவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

"உலகத்தைப் புனர் நிர்மாணம் செய்ய பிரிட்டிஷாரும் அமெரிக்க

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## யாரும் வெல்ல முடியாத வீரர்கள்

### ருஷ்யருக்கு ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவின் புகழ்மாலை

பம்பாய், நவ 7

'மனிதசமூக வளர்ச்சிச் சரித்திரத்தில் ஓர் இமைப்பொழுதென்று கூறப்படும் ஒரு கால் நூற்றாண்டில் நீங்கள் செய்து வந்திருக்கும் அற்புதங்களை நாங்கள் ஒருவித பெருமையுடனும் ஆச்சரியத்துடனும் கவனித்து வந்திருக்கிறோம்'' என்று காங்கிரஸ் காரிய நிர்வாகசபை அங்கத்தினரான ஸ்ரீமதி சரோஜினி நாயுடு ருஷ்ய புரட்சியின் 26வது வருடாந்திர தினத்தை யொட்டி இந்தியாவின் சார்பாக ருஷ்யாவைப் பாராட்டி வெளியிட்டிருக்கும் செய்தியொன்றில் கூறுகிறார்.

ஸ்ரீமதி சரோஜினி நாயுடு சிறிது நாட்களுக்கு முன்பு தேக அசௌக்கியங் காரணமாகச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். ஸ்ரீமதி நாயுடு அச் செய்தியில் மேலுங் கூறுவதாவது:-

உங்களுடைய மகத்தான தியாகத்தைக் கொண்டும் உங்களுடைய லட்சியத்தில் நீங்கள் கொணடுள்ள என்றும் மாறாத நம்பிக்கையைக் கொண்டும் பாழடைந்த சாம்ராஜ்யத்திலிருந்து மிகவும் நேர்த்தியான ஜனநாயக உலகமொன்றை நீங்கள் சிருஷ்டித்திருக்கிறீர்கள்.

சீர்கேடான நிலைமையில் இருந்த உங்களுடைய கிருஷிகர்களை ஒரேயடியாகச் சுதந்திர நட்சத்திர உலகிற்குக் கொண்டுவந்து விட்டீர்கள். மனித சமூகத்தில் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகியிருந்தவர்களைக்கொண்டு எவரும் ஜெயிக்கமுடியாத வீரர்களை நீங்கள் சிருஷ்டித்திருக்கிறீர்கள். அவ்வீரர்களே இப்பொழுது உலகசுதந்திரத்தையும நாகரீகத்தையும் பாதுகாத்து வருகின்றனர்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
ஐப்பசிமீ˚ உ௰௫ வியாழக்கிழமை

## ஹிட்லரின் பேச்சு

சென்ற திங்கட்கிழமை (8-11-43) ஹெர் ஹிட்லர் மியூனிச் கூட்டத்திலே தாம் நடத்தும் யுத்தத்தைப்பற்றிப் பேசியுள்ளார்; ஆனால் அப்பேச்சு அவர் பேசிய முந்திய பேச்சுக்கள் போல வீராவேசத்தோடும் மனத்திடத்தோடும் ஊக்கத்தோடும் இருத்தலின்றி, சோர்வுடையதாகக் காணப்படுகின்றதெனலாம். ஹிட்லர் தம் வெற்றி தோல்விகளை மறைத்துச் சொல்லும் இயல்புடையரல்லராம். இப்பொழுதும் அவர் பேசிய சில வாக்கியங்களை ஜர்மனிய வானொலியும் ஜர்மனிய பத்திரிகைகளும் தமக்குப் பிரதிகூலமானவையெனக்கண்டு வெளியிடாது தவிர்த்துவிட்டனவென ஐக்கிய ராச்சியத்தினரின் பிரதான யுத்த சமாசாரத் தந்தி நிருபர் தெரிவிக்கின்றார். ஜர்மனியர் யுத்த அநுபவத்தில் அறிந்தவரையில் கிழக்குப் பகுதியில் நடக்கும் யுத்தமே மகா கடுமையானதெனவும், ஆனால் கடைசி யுத்தம் தங்களுக்கே வெற்றியைத் தருமெனவும் ஹிட்லர் கூறியுள்ளார். இப்பொழுது ருஷியர் பெற்றுவரும் வெற்றியை உத்தேசிக்கும்போது ஹிட்லருடைய பேச்சும் நம்பிக்கையும் ஆதாரமற்றவையெனலாம்; "எதுவும் நடக்கக்கூடும். ஆனால் என்மனத்திடம் குன்றுமென்பது அசாத்தியம்" எனவும் ஜர்மனிய சர்வாதிகாரி எடுத்துப் பகர்ந்துளளார்; இது உண்மையாகவிருக்கலாம். ஜர்மனியிலுள்ள பிரதான பட்டினங்களையும் தொழிற்சாலைகளையும் ஐக்கிய ராச்சியத்தினர்களுரிய ஆகாயப்படை வெடிகுண்டுகளைப் பெய்து அழிவு செய்ததையிட்டு ஹிட்லர் மனம் வருந்துகின்றாரென்பது அவர் பேச்சில் தெரிகின்றது. இந்த யுத்தம் எவ்வளவு நீடித்த காலத்திற்கு நடந்தாலும் ஜர்மனியர் பின்வாங்கப்போவதில்லை, சரண்புகப் போவதில்லையென்ற கருத்தையே ஹிட்லர் பேசுகிறார்; யுத்த ஆரம்பத்தில் இப்படியான வீரப்பேச்சை அதிகாரிகளாயுள்ளார் முந்திப்பேசியதை நாம் அறிவோம்; ஹிட்லர் ஈற்றிலே பேசிய பேச்சு விநோதமானவை:-

"எங்கள் பகைவர் ஒவ்வொரு நாளும் புதிய புதிய வீண்கதைகளை வெளியிடுகிறார்கள்; எனக்கு நாடித் தளர்ச்சியென்றும், நான் எனது உற்றதுணையாகவுள்ள மார்ஷல் கோயரிங் என்பவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டேனென்றும், என் சேனாபதிகள் என்னைக் கைவிட்டனரென்றும் பகைவர்கள் உண்மையற்ற சமாசாரங்களைக் காலந்தோறும் பரப்புகின்றனர்; ஆனால் கடவுள் தாம் இந்தப் பெரிய கருமத்தைச்செய்து நிறைவேற்றும்படி என்னை நியமித்துள்ளார். அப்படி நியமித்த கடவுள் இக்கருமம் கைகூடுமுன்னர் எனக்கு எவ்வகையான இடையூறும் நேரவிடமாட்டாரென்பது என் நம்பிக்கை. என் சனங்களிடத்தில் பராக்கிரமத்தையும் வைராக்கியத்தையுங் கிளரச்செய்து வெற்றி பெறும்வண்ணம் தூண்டுதலாகிய கடமையைத் தெய்வம் எனக்கு அளித்திருக்கிறதேயென்பதைபிட்டு நான்பெருமிதம் அடைகிறேன்; ஆனதால் மனத்திடத்தோடு அமைவுடன் கருமமாற்றுங்கள். என்ன கஷ்டம் இடையில் வந்தாலும் வெற்றிப்பாடு எங்களுக்கேயுரியது என நான் சொல்லுதல் முடியும். நான் நாளைக்கு மீண்டுபோய் விடலாகும்; ஆனால் நீங்கள் உங்களுக்கே பூரணநம்பிக்கையென்ற தீர்க்கமான நம்பிக்கையுடன் வீட்டிற்கு மீண்டுசெல்லுதல் வேண்டும்; ஜர்மனிய மக்கள் தாம் இப்பொழுது சிந்திவரும் இரத்தத்தின்பொருட்டும்படும் கஷ்டநஷ்டங்களின் பொருட்டும் இறுதியில் தக்க சந்மானத்தையடைவார்கள்."

இவை ஹிட்லருடைய பேச்சின் இற்றிலுள்ளன. ருஷிய யுத்தமுனையைப்பற்றிப் பேசும்போது ஹிட்லர் சிறிது தளர்ச்சியுற்றுத்தான் கூறுகின்றார். இத்தலிய யுத்தமுனையில் அவ்வளவு தளர்ச்சியடைந்ததாக யூகிக்க இடமில்லை. ஹிட்லரின் இந்தப் பிரசாரணத்தையும் இப்பொழுது நடக்கும் யுத்தத்தின் போக்கையும் உற்றாராயுமிடத்து, சிலர் நினைப்பது போல், வருகிற "நத்தார்" காலத்தில் இல்லையேல், "ஈஸ்டர்" காலத்தில் இந்த யுத்தம் எதுமொரு முடிவிற்கு வருமென எண்ணுவதற்கு எவ்வகையான ஆதாரமுமில்லையாம். ஜர்மனியர் தாம் தோல்வியுற்றாலும் சமாதானத்தை இரந்து நின்றாலும் கிழக்கேயுள்ள ஜப்பானியர் இற்றைவரையில் அதிக சேதமுறாதவர்களாக இன்னும் யுத்தத்திற்காகிய முயற்சிகளையும் ஆயத்தங்களையுஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த கிழைச்சாதியாருக்கு முடிவு கண்டபிறகுதான் யுத்தத்திற்கு முடிவுகாணலாம்.

### கண்ணிழந்த சிறுவர்களின் கதம்பக் கச்சேரி

கண்டி நவ 7—

செவிடர் பாடசாலையைச் சேர்ந்த ஒரு சிறுவர் கோஷ்டி கேற்றடிநிவிற்றிக் கல்லூரியில் ஓர் கதம்பக் கச்சேரி நடத்தியது, கண்ணிழந்த சிறுவர்கள் வாய்ப்பாட்டுகளைப்பாடியதோடு வாத்தியக் கச்சேரியும் நடத்தினர். கீழ்நாட்டு மேல்நாட்டுச் சங்கீத நிகழ்ச்சிகளும் குறித்த கல்லூரியில் நடைபெற்றன.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

### "நானும் அதற்கு உடன்பட்டேன்"

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து என் மனஞ் சஞ்சலப்பட்டது; புகர்விவாகஞ்செய்ய எனக்கு மனமில்லை; செய்ய மறுத்தால் என் மகனுக்கு மனக்கவலை; இவைகளைச் சிந்தித்துச் சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்குஞ் சமயத்தில் அடுத்தநாட் காலை, முந்தி எனக்கொரு பெண்ணைப் பேசி வந்த அந்தப் பெரியவர் மீண்டும் என் வீட்டிற்கு வந்தார்; வந்த பெரியவர், என் முகத்தில், முன் எப்போதுமில்லாத கவலை குடிகொண்டிருப்பதை அவதானித்து "என்ன தம்பி, எல்லாம் அறிந்தநீர் படித்தநீர் இப்படிக் கவலைப்படலாகுமா? நான்கு ஐந்து குமர்ப்பிள்ளைகளை வைத்துக்கொண்டிருக்குந் தகப்பன்தானும் இவ்வளவு கவலைப்படமாட்டான்; ஒரேயொரு பிள்ளை, அந்தப் பிள்ளையுஞ் சீர் சிறப்புச் செல்வம் எல்லாமுடையவள்; அப்படிப்பட்ட அருமையான ஒரு பெண்ணுக்கா மாப்பிள்ளை அகப்படானென்று அழுகிறீர்; விதி வரமணமகனுந் தானே வருவான்; இப்பொழுது என்ன உம்முடைய பிள்ளைக்கு வயசு போய்விட்டதா? முந்தநாட் பிறந்த பிள்ளை; இதற்கெல்லாங் கவலைப்படுவதா" என்று பலவாறு சொல்லி அந்தப் பெரியவர் என்னைத் தேற்ற முயன்றார்; அப்படி அவர் சொல்ல, அண்ணே அதுவுமொரு கவலைதான்; அதைவிட இன்னுமொரு சங்கடமல்லவா எனக்கு ஏற்பட்டுக்கொண்டது என்றேன்; "என்ன சங்கடந் தம்பி" என்று ஆவலுடன் கேட்டார் பெரியவர். வேறொன்றுமல்ல அண்ணே, நீங்கள் அன்று சொன்னவிதமாகத்தான் என் மகளும் நான் இரண்டாந் தாரம் விவாகஞ்செய்யவேணுமென்று பிடிவாதமாக நிற்கிறாள்.........என்று சொல்லுவதற் கிடையில அந்தப் பெரியவர் துள்ளியெழுந்து பெருஞ்சிரிப்புச் சிரித்து "அப்படிச் சொல்லும் தம்பி, நீர் படித்தவராயிருந்தும், வயசில் அதிகப்பட்டவராயிருந்தும் அந்தச் சிறு பிள்ளைக்குள்ள புத்தி உமக்கில்லையேயென்று கவலைப்படுகிறேன்; இதைப்பற்றி யாரைக் கேட்டாலும் இப்படியே சொல்லுவார்கள்; சஞ்சலமான புத்தியைவிட்டு இப்பொழுதே 'ஓம்' என்று சொல்லும்; நான் இந்த நிமிஷமே போய் அந்தச் சம்பந்தத்தைத்தான் ஒழுங்கு பண்ணிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி யெழுதலும், நான் பெரியவரைத் தடுத்து அண்ணே, அவசரப்படாதீர்கள்; சற்றே பொறுங்கள், இன்னுமொருமுறை என் பிள்ளையின் நோக்கத்தை நன்கு அறிந்து வருகிறேன் என்று கூறுதலும், அவர் என்னைப் பார்த்து, "எத்தனைதரம் கேட்பது; மகளை நான் கல்யாணஞ்செய்ய உத்தரவு தா என்று உமது பிள்ளையைப் பலமுறையுங் கேட்க உமக்கு வெட்கமில்லையா? அப்படிக் கேட்பது முறையா" என்று அதட்டிச் சொல்ல, நானும் பேசாமலிருந்தேன்; நான் அந்த நேரத்திற் கொண்ட மௌனத்தையே அப்பெரியவர் அனுமதியாகப் பாவித்துக்கொண்டு, "தம்பி, பெண்ணைப் பற்றி உமக்குச் சொல்லவேண்டியவைகளெல்லாம் முந்தியே சொல்லிவிட்டேன்; மேலதிகமாக நான் சொல்லுவதற் கொன்றுமில்லை; இன்றைக்கு நல்ல நாள்; நான் இப்பொழுதே போய் அவர்களைச் சந்தித்துப் பேசி ஆகவேண்டியவைகளை ஒழுங்குசெய்கிறேன்; உம்மைப் பெண்வீட்டார்கள் நன்றாய் அறிவார்கள்" என்றார்; அந்த நேரத்தில் எனக்குப் பதிலொன்றுஞ் சொல்லத் தெரியவில்லை; எதுவும் விதியின்படிதான் நடக்குமென்று நினைத்துக்கொண்டு, என் நல்லகாலமோ பொல்லாக்காலமோ, அப்போது அறியேன் நானும் அதற்கு உடன்பட்டேன்;

### 'பேய்கொண்டாலுங் கொள்ளலாம் பெண்கொள்ளலாகாதே'

ஆனாலும் நான் அந்த முதியவரைப் பார்த்து, அண்ணே, என் பிள்ளைக்குக் கல்யாணம் நடத்திக் கண்டுகளிக்க வேண்டியகாலத்தில், விதியின் விளையாட்டினால் நான் கல்யாணஞ் செய்ய என் பிள்ளை பார்க்கவேண்டி நேர்ந்துவிட்டது; நீங்கள் இதற்கு என்ன சமாதானஞ் சொன்னாலும் உலகம் என்னைப் பழிசொல்லுமென்பது எனக்குத் தெரியும்; ஆனதால் நான் கல்யாணம் முடிப்பதென்றால் எவ்வகையான இடாம்பீகமுமின்றி இரகசியமாகவே நடக்கவேண்டும்; இந்த ஒன்றையும் மனத்தில வைத்துக்கொள்ளுங்கள் என்றேன்; கேட்ட பெரியவர் "தம்பி, அப்படிச் செய்வதற்கு எனக்கொரு தடையுமில்லை, பெண்வீட்டாரும் தடையாக நிற்பார்களென்று நான் நினைக்கவில்லை; நின்றாலும் நான் அவர்களைச் சம்மதிக்கச் செய்வேன்; நீர் கேட்கும் கேள்வி நியாயமானது; வேணுமானால் நான் இப்பொழுதே அங்கேபோய் அவர்களுடன் பேசி அவர்களை இசைவித்துப் பெண்ணை இந்த வீட்டிற்குத்தானே கொண்டுவந்து கல்யாணஞ்செய்துவைக்க வேண்டுமென்றும் செய்வித்து வைக்கிறேன்; நீர் விவாகஞ்செய்ய உடன்பட்டதே பெண்பகுதியாருக்குப் பெரிய காரியமாகும்" என்று சொல்லிக்கொண்டு போதற் கெழுந்தார்; எழும்போது எவனோ ஒரு பிச்சைக்காரன் எங்கள் வீடுநோக்கி வருவானாகினான்; அவன் வருவதைக்கண்ட நான், அண்ணே, சகுனம் நல்லாயில்லை, சற்று இருந்து போங்கள் என்று சொல்லி, எழுந்தவரை இருக்கச் செய்தேன்; வந்த யாசகன் பாடத்தொடங்கினான்; மகனே, புவனம், பாடத்தொடங்கியவன் வேறுபாட்டைப் பாட வொண்ணாதா? அவனும் அவசகுனமாய்:-

"சேய்கொண்டாருங் கமலச்
சம்மதுடனே யாவப்
பாய்கொண்டானும் பரவும்
பட்டைச்சரத்தானே,
கோய்கொண் டாலுங் கொளலாம்
நாறுவபதா மனவும்
பேய்கொண் டாலுங் கொளலாம்
பெண்கொளல் ஆகாதே."

என்ற பாட்டையே படித்தான்; அந்தப் பாட்டைக் கேட்டமாத்திரத்தே எனக்குக் கல்யாணம் முடிக்கவேண்டுமென்றிருந்த பாதி விருப்பமும் பறந்துபோய்விட்டது. அண்ணே, கேட்டீர்களா படித்த பாட்டை? அறிந்தீர்களா அதன் பயனை! என்று பெரியவரை வினாவினேன்; "பாட்டுக்கும் எங்களுடைய கருமத்திற்கும் என்ன சம்பந்தம் தம்பி! இரக்க வந்தவனுக்கு மங்கலமான பாட்டு அமங்கலமான பாட்டென்ற பேதந் தெரியுமா! இவைகளையெல்லாம் அவதானித்துப் பஞ்சாங்கம்பார்த்துக்கொண்டிருந்தால், எடுத்துக்கொண்ட கருமம் நிறைவேறுவதெப்படி?" என்று

(தொடர்ச்சி ௫-ம் பக்கம்)

# பண்டைத் தமிழர் நாகரீகம்

(கொழும்புத்துறை, பண்டிதர். வி. கே. பி. நாதன்)

சரித்திர ஆராய்ச்சியால் இன்னதென நன்கு வரையறுக்கமுடியாத பண்டைக்காலத்தில், யாவராலும் நாடப்பட்டதும், நாடெனப்பட்டதும், தன்னையியாற் பன்னுடிகளைத் தாங்கி முன்னாட்டியதும் நம் தமிழ் நாடே! கல்விச் செறிவாலும், செல்வச் செருக்காலும், செய்தொழிற் சிறத்தாலும், அறிவின் நிறைவாலும், வீர இயல்பாலும் மற்றும் எவற்றாலும் தாமே தமக்கு நிகரெனச் சிறந்து வீற்றிருந்ததும் எம் தமிழ் மக்களே. இத்தகைய தமிழ் மக்களது நாகரிகத்தை ஆராயப்புகு முன்னர், அக்காலத்தில் அவர்கள் பரவியிருந்த நாட்டின் எல்லையை அறிதல் அவசியமாகும். ஒரு காலத்தில் இமயமலைமுதல் தென்குமரி வரையுந் தமிழ்மொழியே பரவியிருந்ததென்றும் பின் ஆரியவகுப்பார் இங்கு குடியேறிய காலத்தில் வடபாகத்தில் ஆரியமும், தென் பாகத்தில் தமிழும் வழங்கலாயின எனவுஞ் சிலர் கருதுகின்றனர். எனினும் அக்காலத்திய தமிழ்நாட்டின் பரப்பை ஐயந்திரிபற அறுதியிட்டுக் கூறுதற்குப் போதியசான்றுகள் தமிழ்நூல்களில் கிடைப்பதரிதாயிருக்கின்றது. மிகப் பழைய காலத்தில் தமிழ்மொழியிலெழுதப்பட்ட பனுவல்கள் இக்காலத்திற் பெரும்பாலும் இல்லாதொழிந்தன. தமிழ்மொழியில் மிகப்பழைய நூலாகத் தற்பொழுதுநாம்காணக்கிடைத்திருப்பது "தொல்காப்பியம்" என்னும் இலக்கண நூலேயாம். "இலக்கியமின்றே இலக்கணமின்றே" என்னும் அகத்தியத்தாலும், "இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்" என்னும் நன்னூல் வழியாலும், தொல்காப்பியம் என்னும் இலக்கணத்திற்கு முன்னரே தமிழ்மொழியிற் தலைசிறந்த இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டுமென்பது மறுக்க முடியாத உண்மையாகும். இன்னும் அகத்தியர் தமிழ்மொழியை அவலோகித முனிவர்பாற் கற்றுணர்ந்தா ரெனனும் பௌத்தர்கூற்றும்இதனை வலியுறுத்தும்.

இஃதெங்ஙனமாயினும் தமிழ்மொழியில் தற்போதுள்ள நூல்களைத் துணையாகக் கொண்டு ஆராயுமிடத்து, தமிழ்நாடு வடக்கே திருவேங்கடமலையையும், தெற்கே குமரியையும் மற்றிரு பக்கங்களிலும் கடுங்கடலையும் எல்லையாகக்கொண்டு விளங்கிற்றென்று தெரிகிறது. "வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" என்ற தொல்காப்பியப் பாயிரம் கூறுகின்றமையானும், "நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும், தமிழ் வரம்பறுத்த தண்புனல்நாடு" என்று சிலப்பதிகாரங் கூறுகின்றமையானும் அக்காலத்திய தமிழகத்தின் பரப்பு நன்கறியப்படுகின்றது.

இவ்வெல்லைக்குட்பட்ட அப்பண்டைத்தமிழ் மக்களோ, இக்காலத்துக் காணப்படும் வேற்றுமை சிறிதும் இன்றி, ஓருயிர் என்ன ஒற்றுமையுடையாராய் வாழ்ந்திருந்தனர்; தமது மொழியையும் தமது நாட்டையுமே தமதுயிரென எண்ணினர். அவர்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்என நால்வகையாகப் பிரிவுபட்டிருப்பினும், மனத்தால் ஒருதாய் வயிற்றுச் சேயரே என எண்ணி வாழ்ந்தனர்.

அவருள் அந்தணர் எனப்பட்டார் உண்மையில் அப்பெயருக்கேற்பவே விளங்கினர். "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுகலான்" என்பதும் அவர் பெருமையைத் தெற்றென விளக்கும். அவர்கள் பெரும்பாலும் புலமை நிரம்பியவர்களாய், மற்றையோர்க்கு வேண்டும்பொழுதெல்லாம் நன்மதியூட்டி அவரவர் முயற்சியிற் தளராவிடாது ஊக்கியும், அரசஅவைகளை அலங்கரித்து அவரோடு காலம் போக்கியும், அவ்வக் காலங்களில் அவர்க்கு வேண்டும் நன்மைபல ஆக்கியும், தீய பகைகளைத் தம் இனிய மொழித் திறத்தினால் சந்துசெய்து நீக்கியும், சிற்சில சமயங்களில அமைச்சராய் வீற்றிருந்து அரசியல் முறையைத் தேக்கியும்வாழ்வர்; நாளுங் கோளும் நன்கு அறிந்து யாவரும் அவற்றைப் போற்றுமாறு செய்வர். இவ்வாறு நாடெங்கும் நன்மை விளைவையே முக்கியமாகக் கொண்டு அறிவுறுத்திவரும் அவர்களைப் போற்றுநாரும் உளரோ? ஆகலின், அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியவற்றைப் பற்றி நினைப்பதும் இல்லாது வாழ்ந்தனர்.

எப்பொழுது மனிதர்க்குக் கவலை என்பதற்றதோ, அப்பொழுதே மனிதனது அறிவொளி வீசத் தொடங்குகின்றது. கவலை, அறிவாகிய சூரியனை மறைக்கும் தேகப்படலமாம். அது நீங்கின், அறிவானது வானளாவிச் செல்லும். இத்தகைய அறிவுடன் வாழ்ந்த நம் பண்டை அந்தணர்களின் அறிவின் திறத்தால் நாடு அடைந்த பெருமையை நாம் சொல்லவும் முடியுமோ? இவ்வாறு தம் பிறப்பைப் பிறர்க்கே உழைக்துப் பெருமை பெறச் செய்தனர் பீடுசால் அந்தணப் பெரியோர்.

இனி அரசரோ என்னில், காவலர் என்ற பெயர்க்கேற்ப தமிழ்நாடு முழுமையும் இனிதே காத்தனர். தமிழ் அரசர்கள் ஒழுக்கத்திற் சிறந்திருந்தவர்கள். அவர்கள் ஒழுக்கம் தவறியவர்கள் என்பதற்கு ஆதாரமே கிடைத்தில. "தென்னவன் தீதிலன்" என்று தன் கணவனைக் கொல்வித்த பாண்டியனைக் கண்ணகியே வாழ்த்தினமை காண்க. முடியுடைமூவேந்தர் பொதுப்பெண்டிரை விரும்பிய புன்மையர் அல்லர் என்பதும், கொடுங்கோலை நினைக்கவும் அஞ்சியவர்கள் என்பதும் பண்டை இலக்கியங்களால் அறியப்படும் செய்திகளாம். "பகைவரைப் போரில் வெல்லேனுயின், யான் குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக" என்று சோழன்நலங்கிள்ளி கூள்உரைத்தல் காண்க. "பகைவரை வெல்லேனுபின் யான் புகழமைந்த பாண்டியர் மரபிற் பிறவாமற போவேனாக" எனப் பூதப்பாண்டியன் ஆணையிட்டதாலும் அறிக. "பகைவரைப் போரில் வெல்லேனுயின் பொதுப்பெண்டிரைப் புணர்ந்த புல்லியன் ஆகக்கடவேன் யான்" என்று பாண்டியன் நெடுஞ்செழியன் பகர்ந்த சூளையும் உன்னுவோமாக. இவை யாவும் அவர்தம் அறநெறி பிறழா நேரிய நன்னெறியை நன்னுறக் காட்டுகின்றன அல்லவா? அரசர்க்குக் காவலர், புரவலர் என்னும் பெயர்கள் அமைந்துள்ள பெற்றியும் நோக்கத்தக்கது. அவர்கள் தம்மைக் குடிகளின் காவலர் — பாதுகாப்பவர்; புரவலர்—காப்பவர்என்று நினைத்து நடந்து வந்தனரேயன்றி "ஆள்பவர்" என்னும் அகங்காரப் பெயருடன் இருந்தவர் அல்லர். அவர்கள் குடிகளைக் காத்து அரசுசெய்தல் கடினமானதும் பொறுப்பு வாய்ந்ததுமான வேலை என்பதை நன்குணர்ந்தவர்கள், செங்கோலே தமக்குயிர் எனக் கருதி வாழ்ந்த

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# மணிப்பிரவாள வசனம் 4

(திரு. அ. வி. மயில்வாகனம், ஜேயல்கல்லூரி)

## வைணவ நூல்கள்

நாச்சியார் திருமொழி:— இது 8ம் நூற்றாண்டுவரையில் பெரியாழ்வார் மகளார் ஆண்டாள் என்பார் எழுதியதாகும். இதற்கு உரையாசிரியர் பெரியவாச்சான் பிள்ளையாவர். இவரைப்பற்றி ஏலவே அறிந்தோம். இந்த உரைநடை மாதிரிக்கு ஒரு சிறு உதாரணம் தருவோம். (P. 256) நம்முடைய ஆத்மஸமர்ப்பணம் போலே அவனுடைய ஔதார்யமும் அவனுடைய வஸ்துவையிறே அவனுக்குக் கொடுக்கிறது, ஆனால் ஆத்ம ஸமர்ப்பணம் குற்றமோ வென்னில்; 'என்னது' என்றிருந்தவன்று அவனுக்கு என்ற கொடுக்கப்ராப்தம். ப்ராப்தவன் மூய்த்துக் கொடுக்கப் ப்ராப்தியுள்ளது. தன்னையே வேட்டல் என்னும் தலைப்பில் நாம் மேற்கூறியதை அமைக்கலாம். வைணவ சம்பிரதாயம் அறியாத எமக்கு இதனுள் ஒரு சொற்குவியலேயே தோன்றும். ஆனல் அவருக்கோ இதனுள் சிறந்த தத்துவார்த்தம் பொதிந்திருக்கும். சிலவிடத்தில் அலங்கரிப்பார், ஸாதாரம் என்று வரும் சில சொற்கள். இவை அச்சுப்பிழை யல்லாவிடின, அலங்கரிப்பார், சாதாரணம்,[1] என்றுதல் முறை. மணிப்பிரவாளத்திற்குரிய அன்றிக்கே, நிற்குமிறே, பண்ணுகிறுனிறே என்பன இதனுள் பலவுள.

பெரியாழ்வார் திருமோழி:- இந்நூல் கலிப்பா, விருத்தம் முதலிய பாக்களாலாயது. 445 பாட்டுகள் கொண்டது. இதனுள் கலித்தாழிசைகளும் கலிவிருத்தங்களும் உள. இதற்கு நான்கு உரைகள் உள. உரையாசிரியன்மார் முறையே, திருவாய் மொழிப்பிள்ளை, மணவாள முனிவர், பெரியஜீயர், பெரியவாச்சான்பிள்ளையாவர். இவற்றுள் கடையதே சிறந்ததாகும். இவ்வுரையாசிரியர் இதற்கு மாத்திரமன்றி ஏனைய பல வைணவ நூல்களுக்கும் உரை எழுதியிருக்கிறார். சகல இலக்கியத்திற்கு நச்சினார்க்கினியர் செய்த பேருதவிபோன்று இப்பெரியவாச்சான்பிள்ளை என்பார் வைணவ நூல்களுக்குப் பேருதவி புரிந்துள்ளார்.

இவ்வுரையுள் நாம் முன் ஜயின நூல் உரைகளுள் கண்டனபோன்ற சொற்றொடர்கள் காண்கின்றன. உம்:, உத்தாம்பிள்ளை, காணிகோள், ஏன்றுப்போலே, கைசெய்தல், காட்டியிட்டச் செய்து போனமாயம, என்பன சில.

இங்கே கடைசியாக வந்த சொற்றொடருள் மூன்று வினையெச்சமும் ஒரு பெயரெச்சமும் உள, மேலகண்டர் அகப்பொருளுரையுள்ளும் இப்படிப் பல வந்துள. இஃது அக்காலத்தில் தழுவிய ஒரு மிடுக்கான சுருக்கு நடைபோலும் (terse style)

இனி, அஞ்சாம்பாட்டு, சிறபிள்ளை இடக்கிறது. இந்த தர்மம்: தனும் புதல், வெளிற்றை, சொல்லிவனும், இதினுடைய எம்பாரைப் போலே, ஏறட்டிக்கொண்டு என்பனபோன்ற பல கிராமிய வழக்குகள் இதனுள் வந்துள. எனினும் சில இடங்களில் தனித்தமிழ் வழக்கும் உண்டு. ஆயினும் அதுவே அவருடைய சாதாரண வசனநடை என்று கூற முடியாது. உ-ம்:- (P. 225) என் பிள்ளையைக் களவேற்றுமே உண்டாகில கெண்டியோடே கண்டுபிடித்துக் கட்டிக்கொண்டு வாருங்கோள், என்று முன்பேசொல்லிவைக்கையாலே etc என்பது யசோதை இடைச்சியருக்கு கூறியது. இச்சொல்லடுக்குத் தமிழிற்குப் புதியது. களவேற்றல், உண்டாகில், கோள், வைக்கை; என்பன மணிப்பிரவாள வழக்கு. ஆயினும் சொல் யாவும் தமிழ்.

இனியும் ஒன்று வரும்:- இவ்வளவேயோ பகுதி ஜாதகங்களைப் பல இடங்களிலும் ஆழ்வார்கள் ஆசார்ய துல்யாக்கி கம்மைமும் தோன்றத் தாமுவிடவும் கண்டோமிறே. திருந்தாய், கரையாய், சொல்லாய், என்று த்ரிகாலஜ்ஞர் பலரும் உளரர்பிருக்க ஓதிவகஸாபேக்ஷராய்க் கேட்டதும் இவற்றையிறே etc இதனுள் நூற்றுக்கு 40 விகிதம் வடமொழி உண்டு. தன்மை ஒருமை ஏவல் வினை முற்றிற்கு 'ஆய்' இறுதி இங்கே அதிகம் வருதல் காண்க.

பெரிய திருமோழி.— இதற்கு ஆசிரியர் திருமங்கை ஆழ்வார். இதன் உரை இரண்டு உரையாசிரியர் பெரியவாச்சான்பிள்ளையும் அப்புவும். இரண்டாவதற்கு 'அப்பு-அரும்பதம்' என்றும் ஒரு பெயர் உண்டு. நாம் முன்னர், மேருமந்தாபுராணத்துள்ளுஞ் சூட்டினுள்ளும் கண்டாற்போல இங்கும் சொல் விளக்கம் ஆச்சரியமாயிருக்கின்றது. உம்:- புனல்-ஜலம், துளை-ரக்ஷகம், முலை-ஸ்தனம், பாவி-பாபி, மஞ்சு-மேகம், உய்ய-உஜ்ஜீவிக்க, நல்ல விலக்ஷணமான etc உரையாசிரியருடைய வாசகருக்குச் சில எளிய தமிழ்ப்பதம் விளங்காபோலும். அன்றேல், பிடுடை நடையில் எழுதவெண்ணிப்போலும் இவ்விளக்கப் தரப்பட்டது.*

‡ எதிர்த்தலைப் பாராதே வந்து அவஸரப்ரதீக்ஷனாய் அந்தர்யாமிரூபத்தாலே யிருக்கிற விருப்புஸ்வாமித்துவகார்யமிறே. அவ்வளவன்றிக்கே; கண்ணாலே கண்டு பசிக்கவேணும்; என்னும் வசனத்திடை 7 வடமொழியும் 9 தென்மொழியும் இறே இங்கேயும் வந்துள. இப்படி இவர் வசனம். இனி, திருவிருத்தம்:- இதன் ஆசிரியர் திருமழிசை யாழ்வார். இதனுள் ஆக 120 பாக்களே மாத்திரம் உள. இதற்கு உரை எழுதியவர் பின்னைலோகம ஜீயர். மூலத்துள், எண்களைக் கொண்டே எழுதிய பல பாக்கள் தத்துவார்த்தம பொதிந்துள. திருமூலர் திருமந்திரத்திலும் இப்படிப் பாக்கள் பலவுள.* இதனுள் இருக்கிறது, இருக்கிறதிறே என்னும் இருவினை முற்றுக்களும் வந்துள. 'இறே' எனனும் விகுதி வருமிடத்தைப் பார்த்தால் ஆசிரியர் தங்கோள் நிலைநாட்ட (emphasize) இதனை ஆண்டாரெனபது தோன்றும், 'ஐந்து' எனுஞ் சொல்லை 'ஐய்ந்து' என எழுதாது 'அஞ்சு' எனவெழுதும் வழக்கு மொன்றுண்டு. (வரும்)

---

* Also see Jesperson—"Mankind and Nature"

‡ P. 15.

* See Stz-1.

---

## சினிமா நடிகர் கைது

பம்பாய் அக் 31—

பம்பாய் றெயில்வே ஸ்டேஷனில் இன்று பகல் கல்கத்தா மெயில் இரண்டாவது வகுப்பு வண்டியிலிருந்து இறங்கிய ஒரு பிரயாணி கைது செய்யப்பட்டார். அவர் ஒரு சினிமா நடிகர். அவருக்குக் கவி பாடவும்தெரியுமாம். அவரிடமிருந்த இரண்டு பெட்டிகளில 7 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அபின் கைப்பற்றப்பட்டது.

## சமரசம்

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

சமரசம், சாரம் என்னுஞ் சொற்கள் சைவ சித்தாந்த பரிபாஷையைச் சேர்ந்தவை. சமரசம் என்பது சமம்+ரசம் என்று பிரிக்கப்படும். ரசமாவது சாரம் அதாவது எல்லாவற்றிலுமுள்ள உண்மைப் பொருள். சமம் என்றால் ஒப்பு அல்லது ஒற்றுமையென்று பொருள்படும். ஆகவே சமரசமென்னுஞ் சொற்றொடருக்கு எல்லாவற்றிலுமுள்ள உண்மையை ஆராய்தல் என்று பொருள் கூறலாம். எல்லாச் சமயங்களிலுமுள்ள உண்மைக் கொள்கைகளைப் பட்சபாதமின்றி ஆராய்ந்து ஒற்றுமையைக் காணுதலாம். இதனால் எல்லா உண்மைகளையும் சமமாகவேனும் ஒரே மதிப்புள்ளவைகளாகவேனுங் கருதவேண்டுமென்பது அவசியமன்று. இதனை உதாரணமுகத்தால் விளக்குவாம். வேப்பம்பழத்தின் ரசமும் மாம்பழத்தின் ரசமும் ஒன்றுகா. இவ்விரண்டிற்கும் தனித்தனி உபயோகம் உண்டு. நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு வேம்பு குணஞ் செய்யலாம். மாங்கனிச் சாறு கெடுதிபயக்கும். உண்போர்களின் தேகநிலைக்கேற்றபடி இவை நன்மையையும் தீமையையும் உண்டாக்கும். சைவசித்தாந்தத்தின்படி சமரசமென்னெனின்:—ஒவ்வொரு சமயமும் சிற்சில உண்மைகளைப் போதிப்பவை. மனிதர்களின் பக்குவத்திற்கேற்றபடி அவரவர் அவ்வம் மதத்தை அனுசரிக்கலாயினர் என்பதாம். இப்படி நிகழ்வது இறைவன் ஆணைப்படியென்பதாம்.

உலகத்திலுள்ள மல பசுக்களையும் அவற்றின் கோட்பாடுகளையும் சைவசித்தாந்தம் நிராகரிப்பதில்லை. அதற்கு அவையெல்லாம் உடன்பாடேயாம். உயரமான இடத்தை அடைவதற்கு ஏணிப்படிகள் எவ்வாறு உதவுகின்றனவோ, அப்படியே இவற்றைக்கொள்ளும் சைவசித்தாந்தம். மற்றும் அது பிறமதங்களிலுள்ள உண்மைகளையெல்லாம் திரட்டி வடித்தெடுத்துத் தேன் குடமாகப் பிறருக்கு வழங்குகின்றதென்றுங் கூறலாம். சிறு பூக்களிலுள்ள சொட்டுத்தேனை ஏனைய மதங்கள் உதவுவனவாம்.

"நன்னெறியாவது
நமச்சிவாயவே"

## நம்பிக்கை

நம்பிக்கை விசுவாசம் என்பன ஒருபொருட் சொற்கள். நம்பிக்கையாவது ஒருவர் உண்மையெனக் கொண்ட கொள்கையில் உறைப்புற்று நிற்கச் செய்யும் உள்ளத்துணர்ச்சி. இந்த உணர்ச்சி ஆன்மசிற்சத்திக்குரியதோர் இயற்கைக் குணமாம். இது ஆன்மாக்களது அபேச்சை பற்றி நிகழ்வதன்று. நம்பிக்கை பிறத்தற்குத் தகுதியில்லாதவிடத்து நாம் எப்படி முயற்சி செய்தாலும் அது நம்மிடத்தே பிறப்பதில்லை. நமது சிற்சத்தி ஆற்றலின்கண் யாதொரு கொள்கை உண்மையாகப் புலப்படுமிடத்து அப்புலப்பாட்டைக்குறித்து நமது உள்ளத்தில் ஓர் உணர்ச்சி நம்முயற்சி இல்லாமல் தானாகவே நிகழும். இவ்வுணர்ச்சியே விசுவாசமாகும். இவ்வுணர்ச்சியைத்தானே அகக்காட்சியென்று ஆன்றோர் கூறுவது. நாம் ஐம்புலனாயிலாகக் காணும் காட்சியெல்லாம் நமது புறத்துறுப்புகளாற் காணுங் காட்சியாகலின் புறக்காட்சியெனப்படும். இப்புறக்காட்சியிற்றவிர்ந்து நமது விவேகசாதனை கொண்டு காணும் காட்சி நமது அகக்கரணத்தாற் காணப்படுவதாகலின் அகக்காட்சியெனப்படும். இக்காட்சி அறிவுக்காட்சி எனவும் பெயர்பெறும். இவ்வறிவுக்காட்சிதானும் நமது உணர்ச்சிகொண்டு காணும் காட்சியை நோக்கப் புறக்காட்சியாபொழிய, உணர்வுக்காட்சியே உண்மையான அகக்காட்சியெனப்படும். அறிவதும் உணர்வதுமாகிய இரண்டும் நமது சிற்சத்தியின் தொழில்களேயாயினும் இவ்விரண்டுக்கும் பெரிதும் பேதமுண்டு. உணர்தற்றொழில் அறிதற்றொழிலுக்குப்பின்னர் நிகழ்வது. அறிதற்றொழில் எமது சைதன்னிய ஆற்றலின் புறத்தொழிலும், உணர்தற்றொழில் அதன் அகத்தொழிலுமாமென்று கொள்ளத்தக்கன. அறிதற்படி நன்றும் உணர்தற்படி இதிதொன்றுமாமென்று கொள்ளினும் இழுக்காது. நாம் யாதொரு உண்மையை அறிந்தாலும் அவ்வுண்மையில் நமக்கு விசுவாசமாகிய உணர்வு பிறந்தாலன்றி அவ்வறிவால் நமக்கு பயன் எய்துமாறில்லையாம். ஆகவே இவ்வுணர்வுக்காட்சியாகிய அகக்காட்சி தானே அறிவுக்காட்சியாகிய புறக்காட்சியினும் மிகச் சிறப்புடைத்தாம்.

## 'புல்லர்ஸ் லேன்' கத்திக் குத்து வழக்கு

சுப்றீம் கோட்டில் விசாரிக்க உத்தரவு

'புல்லர்ஸ்லேன்' கத்திக்குத்து வழக்கு மீண்டும் கொழும்பு நீதிபதி முன்னிலையில் விசாரிக்கப்பட்டபொழுது திம்பிரிப்போலையைச் சேர்ந்த பி. கார்தலிஸ் என்னும் எதிரிக்குக் குற்றச்சாட்டுகள் வாசித்துக் காட்டப்பட்டன.

'புல்லர்ஸ்லேனைச்' சேர்ந்த திரு. எஸ். நமசிவாயம் தம்பதிகளை எதிரி கொலைசெய்ய முயன்றதாக இவ்வழக்கிற் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி தாம் நிரபராதியெனத் தெரிவித்தார். தாம் வாக்குமூலம் கொடுக்க விரும்பவில்லையென்றும் சாட்சிகள் எவரையும் வரவழைக்க விரும்பவில்லையென்றும் அவர் கூறி ஆங்கிலம் பேசும் ஜூரர்கள் முன்னிலையில் தம்மை விசாரிக்கும்படி கோட்டாரைக் கேட்டுக்கொண்டார்.

இவ்வழக்கைச் சுப்பிறீம்கோட்டுக் கிரிமினல் செஷன்ஸில் விசாரிக்கும்படி நீதிபதி குறிப்பிட்டார்.

## நாவலர்படத் திறப்புவிழா

ஈழநாட்டு இளைஞர் கழகம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ஆறுமுகநாவலர் படத்திற்காகக் கொழும்புத் தமிழ்க்கழக அமைச்சர் திரு. சோ. நடராசா அவர்கள் அனுப்பிய பணத்தையும் அகில இலங்கைச் சைவமகாநாட்டு அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் அனுப்பிய பணத்தையும் பெருநன்றியுடன் பெற்றுக்கொள்ளுகின்றோம். மேலும் பண உதவி தேவைப்படுகின்றது. நாவலரபிமானிகளும் ஏனைய அன்பர்களும் விரைவில் தம்மாலியன்றளவு பணம் அனுப்புவார்களென்று எதிர்பார்க்கின்றோம். படத் திறப்புவிழாவினை மிகச் சிறப்பாக டிசம்பர்மாத முற்பகுதியில் நிகழ்த்த நினைத்துள்ளோம். படத்தினைத் திறப்பதற்கு இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் அவர்களை எதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம்,
கி. இலக்குமணஐயர்
(கழகத்தலைவர்)
செ. சோமசேகரன்
(கழக அமைச்சர்)

## பண்டைத்தமிழர் நாகரிகம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். கன்றின்மேற் சகடு ஊர்ந்ததால் அஃது இறந்துபட அதனால் வருந்திய கறவைக்கு முறைசெய்த காவலும், கன்மே நிலைக்கு நதவத் தட்டிப் பின் அதனுற் றியது விளையுமோ என்று அஞ்சிக் கைகுறைத்துக்கொண்ட செம்மையும், மதிமயங்கி எளிய தன் கட்டளை பழுதுபட்டதென்றறிந்தவுடனே அக்கணமே "மன்பதை காக்கும் தென்புலக் காவல், என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்" என அக்கணமே அரசு கட்டிலிலேயே உயிர்நீத்த நேர்மையும் பண்டைத்தமிழரசரின் செங்கோன்மையை விளக்கப் போதிய சான்றுகளாம்.

இத்தகையோர் தம்முடம்புபெற்ற பயன் நாட்டுக்கு உழைப்பதுவே என்னும் தம் இயல்பைச் செய்கையால் வெளிப்படுத்தினர், தம்நாட்டின்நலத்திற்காக அவர்கள் உழைத்த வழிகள் அனந்தம். கல்வியைப் பெருக்கக் கருதி, பல்வேறு துறைகளில் தேர்ந்த புலவரைப் பன்னாட்டகத்திலிருந்தும்கொணர்ந்து வரையாதளித்து மகிழ்வித்துப் பெருகச் செய்தனர்; ஆங்காங்கே சங்கங்கள் ஸ்தாபித்தனர். வறுமையால் வாடிவரும் புலவர்களுக்கும் வரையாது கொடுத்து அவர்கள்புலமைத் திறத்தினாலேயே அழியாத கல்வியை வளர்த்து நிலையான கீர்த்தியும் கொண்டனர். இவ்வாறே கைத்தொழில்முறைகளையும் நாட்டில் பலவாறு வளரச் செய்தனர். பண்டை அரசர், உண்மை வீரமிக்க வீரர்களை ஆதரித்து வருதலிலும் மிக்க கண்ணுயிருந்தனர். ஒவ்வொருதுறைக்கும் மந்திரிகளை நியமித்து அவர்கள் மூலம் யாவற்றையும் நடத்தி வந்தாரெனினும், தாமே நேரில் அவற்றைச் செய்தலுமுண்டு. போரில் அவ்வவர் திறனுக்குத் தகப் பரிசில் ஈந்து அவர்களை முயற்சிகுன்றாது ஊக்குவதை ஒரு கடமையாகக் கொண்டிருந்தனர். அறப்போரன்றி மறப்போரென்பதையே அறியாத தமிழ்மறவர் போர்த் திறனையும் வீரச்சிறப்பையும், வெட்சி, காந்தையாகிய திணைப் பகுப்புகளாலே நன்கறியலாம். மற்றும் சுகாதார வாழ்க்கைக்கு இன்றியமையாதன பல செய்தும், மக்கள் நலம் பெறுதற்கு மூலாதாரமான பெண்கல்வியை நன்கு வலியுறுத்தியும், பெண் மக்களும் குழந்தைகளும் மொழி-நாடு எனறிவற்றில் அழியாத அபிமானத்தை அடையுமாறு பலவிதத்தானும் சீரும் சிறப்பும் ஓங்க அரசாண்ட தமிழ்மன்னர் அரசியற்றிறம், யாவராலும் அதிசயிக்கத்தக்கதேயாம். இத்தகைய அரசியல்மிக்க செந்தமிழ்நாடு, பண்டைக்காலத்தில் இந்தியாவின் சிரோரத்தினமாய் விற்றிருந்ததும் வியப்பாமோ! அரசியலே எவற்றுக்கும் மூலாதாரமன்றோ!

அடுத்த படியாக வணிகரோ எனில், நாட்டின் செல்வநிலைக்கு ஆதாரமாயுள்ளவர் எனக் கூறப்படுவர். அவர்கள் செய்தொழில் வேற்றுமையால் பல்வேறு திறப்படுவர். அவருட் புலவரும் உளராவர். கலநீதேறிச் சென்று பிறநாட்டுச் செல்வம் வாரித் தம் நாட்டகத்தில் நிறைப்பாரே மேம்பாடு நிலையினராவர். அவர்கள் அரசனால் சன்மானிக்கப்படுதலுமுண்டு. அரசனால் எட்டிப் பட்டம் பெற்றவரே தவப்பெருஞ் செல்வராய் விளங்குவர்.

வேளாளர், உழுதுண்போர், உழுவித்துண்போர் என இருவகைப்படுவர். உழுதுண்போரே உலகின் உணவிற்கு உறுபெருந்துணையாயிருந்தனர். "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே," என்றபடி உலகிற்கு உயிராயிருந்தவர் அவரே. நிலத்தின் தன்மையறிதலில் இணையற்றவரும் இவரே. அதன் தன்மைக்குத் தக உழுது பயிரிட்டுப் பொன் விளையும் நன்னாடு எனப் போற்றச் செய்தனர். உழுவித்துண்போர் அவரினும் சிறிது மேலானவர் என்று கருதப்பட்டு வந்தனர். அவர்கள் முடியுடைவேந்தரின் கீழ் குறுநிலமன்னராய் ஆட்சிபுரிந்து வந்தனர். வேந்தர்க்குப் பல விதத்தாலும் உதவிபுரிந்து வந்தவரும் இவரே.

இந்த நான்கு வகுப்பேயன்றிச் செய்தொழில் வேற்றுமையால் வேறு சில சாதியாரும் உளர். அவர்கள் இணைவகையாலும் பகுக்கப்பட்டிருந்தனர். கம்மியர், குயவர், கூத்தர், கொல்லர், தச்சர், தேர்ப்பாகர், துடியர், பாணர், பூண்செய் கொல்லர், பொருநர், மறவர், வலைஞர் முதலாகப் பலதிறப்படுவர். இவர்களாலேயே செந்தமிழ்நாடு கைத்தொழிலில் கவின் பெற்றது. பண்டுகளுடன் கடல் வழியாய் வாணிபம் செய்தற்குக் கலங்களும் அக்கலங்கள் இரவில் கடல்வழிச் செல்லக் கலங்கரை விளக்கங்களும் இவ்வுலகில், முதன் முதலிற் கண்டவர் நம் பண்டைத்தமிழ் மக்களே! நாடக இலக்கணம் கண்டோரும் அவரே. விறாவணி முதலியவற்றை முரசின் மூலம் சாற்று முதன் முதலில் அறிந்தோரும் அவரே. மண்ணாற் பலதிறப்பட்ட குடங்கள் செய்தோரும் நம்மவரே. பொன் சுரங்கங்களைக் கண்டு அவற்றை வேறு பிரித்தெடுத்து அணிகள் பல செய்வதை அறிவித்தோரும் நம்மவரே. பஞ்சினும், பட்டினும், மயிரினும் நுண் துகில் செய்து மேம்பட்டவரும் நம் தமிழ் மக்களே. நகவழி ஆற்றிடும் திறமிக்கரும் நம் பண்டைத் தமிழ் மக்களே. மண்ணாலும் கரையாலும் மாடங்கள் பல செய்தும் மண்ணிடுகள் பல இயற்றியும் கல்லைத் துளைத்துக் குகைகள் பல சமைத்தும் தலைசிறந்தவர் தமிழ் மக்களே. கோட்டை மதில்களை இயற்றி, அவற்றில் பகைவர் கிட்டுதற்கரிய இயந்திரப் பொறிகளை யமைத்து, அப்பொறிகள் தாமே இயங்குமாறும் செய்து வைத்தோரும் நம் பழைய தமிழ் மக்களே. மாணிக்கமுதலியவற்றை முடிசூட்டு விழாவிற் கணிந்த ஆடைவகைகளை அணிந்தோரும் நம்மவரே. கடலிலிருந்து முத்தையும் உப்பையும் எடுத்து உலகிற்களித்தோரும் தமிழரே. பல சொல்வானேன்? இவ்வுலகிற்கு ஆவனயாவும் இயற்றி வழிகாட்டினோர் பண்டைத்தமிழ் மக்களேயாவர். (வரும்)

பல் வைத்தியம்
யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சான்ஸ் பத்திருஞ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டிக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.
(Mis. 98. 5.8—31.12.43)

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

"அதட்டி"ச் சமாதானஞ் சொன்னார் பெரியவர். இதற்கிடையில் எனது மகள் அந்த யாசகனுக்கு ஏதோ பிச்சையிட அவன் ஏற்றுக் கொண்டுபோய்விட்டான்; முதியவரும் பல சமாதானங்களைச் சொல்லி என்னைத் தேற்றிவிட்டுக் கல்யாணம் ஒழுங்கு செய்வதற்காகக் குறித்த பெண்வீட்டிற்குப் போனார். நான் யாசகன் படித்த பாட்டையே மேலும் மேலும் சிந்தித்துக் கொண்டிருந்தேன்;

### புநர் விவாகம்

போன பெரியவர் எல்லாம் ஒழுங்குசெய்துகொண்டு அன்று பொழுதுபடவே மீண்டு எம் வீட்டிற்கு வந்தார்; அண்ணே, என்ன செய்தி யென்று கேட்டேன்; "செய்தியென்ன தம்பி; நாளை மற்றைநாள், அதாவது சனிக்கிழமை ஒரு "பொது" நாளாம்; முகூர்த்தம் இரவு 12 மணியாம்; உம்முடைய வசதிக்கும் விருப்பத்திற்கும் இணங்க எப்படியுஞ் செய்துகொள்ளலாமாம்; பிறகு இந்த மாசத்தில் நல்ல நாளில்லையாம்; உடனே உம்முடைய மறுமொழியைக் கேட்டறிந்து வந்து தங்களுக்குத் தெரிவிக்கும்படி பெண்வீட்டார் சொன்னார்கள்" என்றார் அந்தப் பெரியவர்; அண்ணே, நாளைபொரு நாளுக்கிடையில் எல்லாம் ஆயத்தப்படுத்திக் கல்யாணவிதி நடத்த முடியுமோ என்று நான் கேட்க, அவர் "என்னதம்பி சொல்லுகிறீர்; இது ஏதோ இரகசியமாக நடக்கவிருக்குங் கல்யாணம்; ஊர்முழுவதுஞ் சொல்லி மிகவும் இடாம்பிகமாகச் செய்வதற்குத்தானும் இடையிலொரு நாளிருந்தாற் போதுமே" என்று சொல்லி ஊக்கப்படுத்தினர் பெரியவர். "என்ன அண்ணே இப்படிச் சொல்லுகிறீர்கள், நாட் பார்த்துப் பொன்னுருக்க வேண்டாமா? பந்தற்கால் நாட்டவேண்டாமா; தட்டான் தாலி பண்ண வேண்டாமா...." என்று நான் வினவுதற்கிடையில் "தம்பி, நீர் என்ன முதன் முதற் கல்யாணஞ் செய்வதாகவா நினைத்துவிட்டீர்; இரண்டாந்தாரத்திற்கு இந்த அடுக்கெல்லாம் எதற்கு, முந்திய மனைவிக்குக் கட்டிய தாலியில்லையா? கொடுத்த கூறையில்லையா" என்று நியாயஞ்சொல்லத் தொடங்கினர் பெரியவர்; "அண்ணே, தாலியிருக்கிறது, கூறை பிரேதத்துக்குக் கட்டியபடி தகனஞ் செய்தாய் விட்டது" என்று நான் சொல்லிக் கவலைப்படலானேன்; "நடந்து முடிந்ததை மீண்டும் மீண்டும் நினைத்துக் கலங்குவதென்ன; தம்பி மங்கல்யத்தையும் கொடியையும் என்னிடந்தாரும், நான் ஆகவேண்டிய செய்துகொண்டு வருகிறேன்; மற்றைய ஆகவேண்டிய ஆயத்தங்களை யெல்லாம நானே செய்கிறேன்; நீர் ஒரு முயற்சியுஞ் செய்யவேண்டாம், சும்மா, ஆறுதலாக இரும்" என்று சொல்லித் தாலிக் கொடியையும் வாங்கிக்கொண்டு, அடுத்த நாட் காலை வருவதாகச் சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்; இன்னமும் மறைத்துவைத்திருப்பது சரியல்ல வென்றெண்ணி நான் இச் செய்தியை என் மகளுக்குச் சொல்ல அவள் ஆநந்தமடைந்தாள். ஆனால் என்மனத்தைப் பீடித்த சஞ்சலமோ நீங்கியபாடில்லை; குழந்தாய் புவனம்! அதிகம் விரித்துச் சொல்வதென்ன, அடுத்தநாள் பெரியவர் மங்கல்யம் கொடி எல்லாம் பத்தரைக் கொண்டு பழுக்கச் சுடுவித்துப் புதுக்குவித்து, ஒரு கூறையும் இன்னும் ஆகவேண்டிய அணிகள் ஏனைய பொருள்களெல்லாம் வாங்கிக்கொண்டு வந்து என்னிடம் சேர்த்தார்; தாலிகட்டிக் கல்யாணஞ் செய்வது மாத்திரம் எங்கடமையாக விருந்தது; குறித்த தினத்தன்றிரவு பெரியவரும் அவருடைய மனைவியாரும் துணையாக வர நான் பெண்வீட்டிற்குப்போய் முறைப்படி தாலிகட்டி அன்றிரவு உடனுக்குடனே பெண்ணை அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்; இந்த மங்கல செய்தியைக் கேள்விப்பட்டு அடுத்த அடுத்த நாட்களில் என் வீட்டிற்குச் சுற்றத்தினர் பலர் வந்தார்கள்; நான் வேண்டியபடி உபசரித்தேன்; ஆனால் தங்களுக்குச் சொல்லாமல் இரகசியமாகக் கலியாணம் நடத்தியதைவிட்டு, வந்தவர்கள் என்னைக் குறை சொன்னார்கள்; அவர்களுக்கு ஏதோ இயன்ற சமாதானஞ்சொல்லியனுப்பினேன்; ஆனால் அவர்களுள் ஒருவர் மாத்திரம் "தம்பி, உமக்குக் கல்யாணமென்று எனக்குத் தெரியாது; உமது மகளுக்குத்தான் கல்யாணம் நடந்ததென்றும் அதை எனக்கு நீர் சொல்லாமல் விட்டீரே யென்றும் அபிப்பிராயத்தால் எண்ணி உம்மைக் குறையாக நினைத்துவிட்டேன், அதைப் பொறுத்துக்கொள்ளும்" என்று என்னுள்ளஞ் சுடச் சுடச் சொன்னார்; நான் அதற்கு ஏதுஞ் சமாதானஞ் சொல்ல முடியாமல் முகங்கவிழ்ந்தபடி யிருந்தேன்; அவர் "நான் சும்மா வேடிக்கையாகச் சொன்னேன் கவலைப்படவேண்டாம்" என்று சமாதானஞ் சொல்லிவிட்டுப் போய் விட்டார், (வரும்)

## "உலகம்பலவிதக் கதை" பற்றிய அபிப்பிராயம்

இந்துசாதனத்தில் வரும் 'உலகம்பலவிதக்கதை'யைத் தவறாது கிரமமாக யாமும் வாசிப்பது வழக்கம். இதன் கண் தெளிவாகப் புலனாகின்ற வாழ்க்கையின் 'உயிர்த்தன்மை' எவராலும் மறக்கற்பாலதன்று. 'உலகம் பலவிதம்' பலபாகங்களாகப் பிரசுரிக்கப்பட்டது கேட்டு, வாங்கி வாசித்தபோது முன்பு காணாத புதுச்"சுவைகள்" புலப்பட்டன. அவற்றுள் "துரைரத்தினம் தேசமணி" தக்க பலனளித்திருக்கிறது. ஏன்?

சுமார் 2 வருடத்திற்கு முன்பு எனது மாமனாருடன் ஏற்பட்ட மோசமான கலவரத்தின் பலனாக யான்எனது கிருகஸ்தானத்தையே விட்டு முள்ளியவளை, நெடுந்தீவு முதலாய இடங்களின் ஏகாந்தத்தையும், சாந்தத்தையும் மேவி நின்றேன். இவ்வாறு யான் புறப்பட எண்ணிய சமயம் என் பாரியார் தான் தன் தந்தையை நிந்தித்தமைபற்றி, தன் கொழுநனுக்குச் செய்யவேண்டிய சேவைகளையும்மறந்து என்னுடன் ஒற்றுமையாக வாழ்தலின்றி மாறுபட்டார். தந்தையும், தனயனையும் தம் பேரப்பிள்ளைகளையும் 'காய் கொடிக்குப் பாரமல்ல', என்று ஆதரித்துக் கொண்டார்.

இப்பிரிவு வடலாகி, துனியாகித் தடித்தது. இதுகண்ட பெரியார்கள் முருகரம்மான்முதலானவர்கள் 'செருப்புத்தேய' நடந்தும் சமாதானஞ் செய்தல் பிரதிகூலமாகவே முடிந்தது. இதற்குக் காரணம் எம் தலைவியர்க்கும்(எமக்கும்) உலகத்தின் நிலைமைபற்றிய அறிவுக் குறைவேயாகும். இதனை நன்கு உணர்ந்து ஷை கதைகள் புஸ்தகரூபமாக வந்ததின் பலனாக, சிலவற்றைத் துணைவியர்க்கும் அனுப்பி வைத்தேன். பலர் முடிக்காத கருமத்தைத் தங்கள் புஸ்தகம் முடிப்பதுகண்டு அதன் நூலாசிரியர்க்கு எம்போலியர்களின் பெயரால் "துதி" கூறுமல் இருக்க எப்படி முடியும்?

6-11-43.

R. T. S.
நெடுந்தீவு.

## முட்டைவடிவான 155 காரட் வைரம்

### 50000 பவுணுக்கு வாங்கப்பட்டது

நியூயார்க் நவ 2—

வைர வியாபாரிகள் சங்கத்தைச் சேர்ந்த மிஸ்டர். ஹென்றி ஜில்ஸன் 155 காரட் எடையுள்ள முட்டை வடிவமான ஒரு பெரிய வைரத்தை 2 லக்ஷம் டொலருக்கு (சுமார் 50000 பவுணுக்கு) விலைக்கு வாங்கியிருக்கிறார். வெனிஸுலாவில் கிடைத்துள்ள வைரங்களில் இதுவே பெரியதாகும்.

## அடுத்த 'சிவில் சேர்விஸ்' பரீட்சை

### மறுவருடம் நடுப்பகுதியில் நடைபெறும்

சி. சி. எஸ். பரீட்சைக்குரிய புதியபாடத் திட்டம் சமீபத்தில் வெளியிடப்படும். சில மாதங்களுக்குமுன் நியமிக்கப்பட்ட சிவில் சேர்விஸ் கமிஷன் இதுவரை திட்டந் தயாரிக்கும் வேலையையே கவனித்து வந்தது. இப்பரீட்சையின் பாடத்திட்டம் ஏறக்குறையப் பூர்த்தியாகிவிட்டது.

இதுவரை இருந்து வந்த தேவைகள் சம்பந்தமாகப் பாடத்தில் எவ்வித மாறுதல்களையும் சிவில் சேர்விஸ் கொமிஷனர்கள் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

### தேதியில் மாற்றம்

அடுத்த சிவில் சேர்விஸ் பரீட்சையின் தேதி மாற்றப்படக்கூடுமெனத் தெரிகிறது. முந்திய வருடங்களில் ஜனவரி மாதத்தில் நடைபெற்றுவந்த இப்பரீட்சை அடுத்த வருடம் நடுப்பகுதியில் அதாவது சர்வகலாசாலைப் பரீட்சைகளின் பின் நடைபெறலாம்.

இம்முறை கைபாளப்பட்டால் சிற்சிலர் பாதிக்கப்படக்கூடுமென்பதை உத்தேசித்து விசேஷ வசதி பேற்படுத்தப்படுமென்றுத் தெரிகிறது. அஃதாவது ஜனவரி மாதத்தில் இப்பரீட்சைக்குத் தோன்றுவதற்கு வயது சம்பந்தமான யோக்கியதாம்சமுடைய சிலர் அவ்வருடத்திற் சிற்சில மாதங்களுக்குப் பின்னர் தோன்றுவதால் வயது அதிகமாகக் கூடுமென்பதை முன்னிட்டுக் குறித்த ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது.

### கஷ்டத்தைப் போக்க

இச்சலுகையை ஏற்படுத்தாவிட்டால் சென்ற பரீட்சைக்குத் தோற்றியவர்களும் அடுத்த ஜனவரி மாதம் தேறுவதற்குத் தகுதியுடையவர்களும் பரீட்சை ஒத்திவைக்கப்படுவதானுற் பாதிக்கப்படக் கூடும்.

ஆயின், அதன்பின்னர் வருடாவருடம்சர்வகலாசாலைப்பரீட்சைகள முடிந்ததும் இப்பரீட்சை நடைபெறும்.

## வதுளையிற் பெருவாரியான 'மலேறியா'

வதுளை நவ 7—

வதுளையில் பெருவாரியான மலேறியாச்சுரம் பிடித்திருக்கிறது. பல உத்தியோகஸ்தர்கள் நோயாற் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே, அரசாங்கக் காரியாலயங்களில் வேலை சரியாக நடைபெறுவதற்கில்லை.

இந்நோயால் வருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் வதுளை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த மருந்துச்சாலையிற் சிகிச்சைபெற நாடிவருகின்றனர்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வெள்ளி நவ 12

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கண்டதேவி என் வெங்கடாத்ரி ஐயங்கார் 9முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கண்டதேவி என் வெங்கடாத்ரி ஐயங்கார் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கே எஸ் தனம் சகோதரர்கள் பாட்டு 5-40 தூரான்—ஷரீப் 6 இஞ்சிக்குடி பிச்சைக்கண்ணு சகோதரர்கள் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 கே எஸ் தனம் சகோதரர்கள் பாட்டு 8-15 இஞ்சிக்குடி பிச்சைக்கண்ணு சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஊ மீனா 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 உலக விவகாரங்கள் 10-00 பட்டிப்பாட்டுகள் † 10-20 கே ஸி டே † 10-30 முடிவு.

### சனி நவ 13

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 அனந்தசயனம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் எஸ் நாராயணசாமி ஐயர் வயலின் 9முடிவு.

1 ஸி கே வேலுதட்டி நாயர் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வேதநாயகம்பிள்ளை பாடல்கள் † 2 தமிழில் செய்திகள் 2-05 என் எஸ் நாராயணஸ்வாமி ஐயர் வயலின் 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 ஸி கே வேலுதட்டி நாயர் பாட்டு 5-40 அழகர் அந்தாதி விளக்கம் 6 திரைகானம் † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 காட்டுச் செல்வம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 டி ஆர் மஹாலிங்கம் புல்லாங்குழல் 9-15 ராம்துலாரி † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பதங்கள் † 10 திருச்சி வாத்ய கோஷ்டி 10-30 முடிவு.

### ஞாயிறு நவ 14

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 வாத்ய கோஷ்டி † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஆர். பிச்சுமணி ஐயர் வீணை 9 முடிவு.

12 திரைக்கதம்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தங்கச்சுட்டி ரவிவர்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக் கதம்பம் 2-30 முடிவு.

மாலை: 5 தங்கச்சுட்டி ரவிவர்மா பாட்டு 5-40 தேவாரத்தை 6 ஆர் பிச்சுமணி ஐயர் வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 முன்னுக்குப்பின் முரண் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 எங்கள் தபால்பெட்டி 8 கே பொன்னையாபிள்ளை பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 நாணப்பெருக்கமும் கோன்னை லாபமும் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் நவ 15

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 சேர்மாதேவி எம் ஆர் குருஸ்வாமி நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பத்தனை கல்லூரி எஸ் ராஜாயி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 சேர்மாதேவி எம் ஆர் குருஸ்வாமி நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 பத்தனை கல்லூரி எஸ் ராஜாயி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்ய கோஷ்டி 8 எம் கே தியாகராச பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 நானைய இந்தியா 10.05 திரைகானம் † 10-30 முடிவு.

## அப்பூதியடிக ணாயனாரின் அரும்புதல்வராகிய திருநாவுக்கரசின் அடியார் பக்தி

(பண்டிதர். ம. கந்தையா, ஆசிரியர் தொண்டைமானாறு சைவவித்தியாசாலை பரமேஸ்வர ஆசிரிய கழகப் பழைய மாணவன்.)

திங்களூரிற் றோன்றிய அப்பூதியடிகளுநாயனார் அறுவகைக் குற்றங்களையும் களைந்தவர். செல்வமிகுந்த இல்லற வாழ்க்கையை யுடையவர். திருநாவுக்கரசரைக் கண்முன்னரே கண்டிலரேனும் அவர் புகழைக் கேட்டறிந்தே அவர்மேல் அளவிலாப் பேரன்பு கொண்டவர். அவர்மேற் கொண்ட அன்பு காரணமாகத் தம் வீட்டிலுள்ள பசு, எருமை முதலிய பொருட்களையும் அவரின் திருநாமத்தினாலழைத்தார். இன்னும் திருமடங்களையுந் தண்ணீர்ப் பந்தர்களையும் அவர்நாமத்தினாலேயே அழைத்தார். இவர் சிவனடியாராகிய நாவுக்கரசரையே அன்புடன் வழிபட்டு வருவாராயினர்.

இவ்வாறிருக்கத் திருநாவுக்கரசர் திங்களூர்வழிவருங்கால், அவ்விடத்தில் திருமடமும் தண்ணீர்ப்பந்தரும் தம்பெயரா லழைக்கப்படுவதைக்கண்டு ஆச்சரியமடைந்து அவ்வாறு பெயரிட்டார் யாரென அவ்விடத்து நின்றாரைவினவி அப்பூதியடிகளெனவறிந்து அவர்வாழும் இல்லத்திற் சென்றணைந்தார். சென்றணைந்ததும் அப்பூதியடிகள் அவர் பாதம் பணிந்தனர். அவரும் பணிந்தனர். பின்னர் அடியார் வந்த காரணத்தைவினவ, அவர் அப்பூதியடிகளின் அறச்செயலைக் கேள்வியுற்று வந்ததெனக்கூறினர், நாவுக்கரசர் அப்பூதியடிகளை நோக்கித் தண்ணீர்ப்பந்தர், திருமடம் முதலியவற்றிற்குச் சிவனாமத்தையிடாது திருநாவுக்கரசு என்னும் வேறொரு பெயரிட்டதன் காரணத்தைக்கேட்க அப்பூதியடிகள் அளவிலாத் துக்கங்கொண்டு அவரை வெகுண்டு திருநாவுக்கரசரை யறியாது கூறினருய் போலும் என்றார். அப்பூதியடிகள் கொண்ட அடியார் பக்தியைத் திருநாவுக்கரசர் கண்டு அளவிலா ஆனந்தமடைந்தார். திருநாவுக்கரசர் தானேயென்பதை அறிவித்தார். அப்பூதியடிகள் அளவிலா ஆனந்தமடைந்தார். திருநாவுக்கரசரைத் திருவமுது செய்தேகும்படி வேண்ட அவரும் உடன்பட்டனர்.

மனைவியும் தானும் அறுவகைச் சுவைகளோடும் கொண்ட கறிகளையும் இனிய அமுதையுமாக்கி நாவுக்கரசர் திருவமுது செய்தருள வாழைக் குருத்துக் கொண்டு வரும்படி தம் மூத்தபுதல்வனை யேவினர்.

ஏவிய மகனின் அருட்பெருங் குணத்தை யினிதுநோக்குவாம்.

"நல்லதாய் தந்தையேவ நானிது
செயப்பெற் றேனென்
றொல்லையி லணைந்து தோட்டத்
துட்புக்குப் பெரியவாழை
மல்லலங் குருத்தையீரும் பொழு
தினில் வாளராவொன்
றல்லுறு றழுங்கவீழ வங்கையிற்
றீண்டிற்றன்றே"

தாய்தந்தையர் ஏவலைத் தவறாது செய்தலில் மகிழ்ச்சியுடையர் என்பது, "நானிது செயப்பெற்றேன்" என்னுஞ் சொற்றொடரால் அறியக்கிடக்கின்றது. இன்னும் "ஒல்லையிலணைந்து" என்றதனால் வாழைக் குருத்தைக் கொண்டுவருதற்கு மிக்க அன்புடனே சென்றான் அப்புதல்வன் என்பதும் போதரும். விரைந்து சென்று தோட்டத்துட்புக்கு, பெரிய வாழை மல்லலங் குருத்தை யீர்த்தான் என்றதனால் திருநாவுக்கரசர் திருவமுது செய்தற்குச் சிறந்த இலை கொண்டுபோக வேண்டுமென்னும் அவாவுடையான் அப்புதல்வன் என்பதும் அறியக் கிடக்கின்றது.

ஐயோ! பரிதாபம். வாழைக்குருத்தை யீரும் பொழுதில் பாம்பு தீண்டிற்று. பாம்பினால் கடியுண்ட அப்புதல்வனோ தன் வருத்தம் நோக்கினானல்லன். விடத்தினாலறிவுசோர முன்னர் வாழைக்குருத்தைத் தந்தை தாயரிடம் கொடுக்கவேண்டுமென்னும் ஆசையுடன் விரைந்து சென்றான்.

"பொருந்திய விடவேகத்திற்
போதுவான் வேகமுந்த
வருந்தியே யணையும்போழ்து
மாசுணங் கவர்ந்த தார்க்கு
மருந்தவ ரமுது செய்யத் தாழ்க்கயா
னறையேனென்று
திருந்திய கருத்தினோடுஞ் செழு
மனை சென்று புக்கான்"

விடவேகத்தினால் வருந்திச்செல்லும் அப்புதல்வன், தான் பாம்பினால் கடியுண்டமை மற்றவர்களுக்கு அறிவிப்பின் அது காரணமாகத் திருநாவுக்கரசரின் திருவமுதுசெய்தல் சிறிதுநேரந் தடைப்படுதலுங் கூடும். அவ்வாறு தடைப்படாவண்ணந்தான் அச்செய்தியை ஒருவருக்குமறிவிக்க மாட்டேன் என்னும் உணர்ச்சியோடு அப்புதல்வன் வீடு சென்று சேர்ந்தான் என்பதை "மாசுணங் கவர்ந்ததார்க்கு மருந்தவரமுது செய்யத் தாழ்க்கயானறையேன்" என்னும் சொற்றொடரான் அறியக்கிடக்கின்றது.

விடவேகத்தினால்தன்னுயிர் நீங்கினும் திருநாவுக்கரசர் திருவமுது செய்தல் சிறிதும் தடைப்படாது நிறைவேறவேண்டுமென்னும் எண்ணமுடைய அப்புதல்வனின் அடியார் பக்தியை எவ்வாறெடுத்துரைக்கலாம்!

வாழைக்குருத்தைக் கொண்டு சென்று தாயார் கையிற் கொடுத்து உயிர்சேர்ந்த புதல்வன் விடத்தினால் இறந்தான் என்று எண்ணினர்.

"பெறலரும் புதல்வன் றன்னைப்
பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர் புடை
யினின் மறைத்துவைத்தே
யறவிது தெரியாவண்ண மமுது
செய் விப்போமென்று
விறலிடைத் தொண்டனார்பால்
விருப்பொடு விரைந்துவந்தார்"

புதல்வனைப் பாயில் வைத்து மூடி ஒருவருமறியாவண்ணம் ஒரு பக்கத்தில் மறைத்து வைத்துத் திருநாவுக்கரசரைத் திருவமுது செய்விக்கச் சென்றார்கள். அப்பூதியடிகளும் அவர் மனைவியும் இறந்த மகனை நோக்கி சிறிது சிந்தைகலங்காது திருநாவுக்கரசரைத் திருவமுது செய்விக்க வேண்டுமென்னும் எண்ணத்தைக் கொண்ட அப்பூதியடிகளின் அடியார் பக்தியை அழகுறக் காட்டுமன்றோ!!

உயிரினுஞ் சிறந்த பொருளில்லையென்னும் உள்ளக்கிடக்கை யாவரிடத்தும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் இருக்கின்றதல்லவா? அப்பூதியடிகளின் அரும்புதல்வனும் திருநாவுக்கரசர் தனதுயிரையும் பொருட்படுத்தாது திருநாவுக்கரசருடைய திருவமுது செய்தல் தடைப்படாவண்ணம் நிறைவேற வேண்டுமென்னும் எண்ணத்துடன் அறிவு சேர்ந்தமை அவ்வரும் புதல்வனின் அடியார் பக்தியை அழகுறவுணர்த்து மன்றோ!!

சைவசமயத்தோர் யாவரும் இத்தன்மையை உளத்திற்கொண்டு உய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

## நிதி வரவு

சைவப்பிரகாச யந்திரசாலைக் கடன் நிவிர்த்தியின் பொருட்டும் சேமநிதியின் பொருட்டும் பணமுதவிய அபிமானிகளின் பெயரும் பணத்தொகையும் வருமாறு:—

| | ரூ. | ச. |
|---|---|---|
| 23—9—43-ல் வெளிவந்த இந்துசாதனத்தில் கண்டதொகை | 1085 | 00 |
| முதலியார் P. இராஜகோபால், வண்ணார்பண்ணை | 15 | 00 |
| திரு. V. அரசரத்தினம், கரம்பன், ஊர்காவற்றுறை | 5 | 00 |
| ,, C. வன்னியசிங்கம், அத்வக்காத், தெல்லிப்பழை | 25 | 00 |
| ,, A. R. சண்முகரத்தினம், அரசினர் ஆசிரிய கலாசாலை கோப்பாய் | 10 | 00 |
| ,, S. விசுவலிங்கம், வழக்கறிஞர், நல்லூர் | 10 | 00 |
| ,, S. S. ஆறுமுகம்பிள்ளை, பெரியகடை, யாழ்ப்பாணம் | 10 | 00 |
| ,, K. K. A. கந்தையாபிள்ளை ,, ,, | 10 | 00 |
| ,, V. M. கந்தவனம் அன் சன், ,, | 25 | 00 |
| ,, S. சபாரத்தினம், வழக்கறிஞர், காரைநகர் | 10 | 00 |
| ,, K. தில்லையம்பலம், விதானை, காரைநகர் | 25 | 00 |
| ,, மனேஜர், யாழ்ப்பாணம் ஐக்கியசங்க பண்டசாலை | 100 | 00 |
| ,, S. இராமையா அன்பிறதர், கொட்டடி | 15 | 00 |
| ,, V. சிவகுரு, பெரியகடை, யாழ்ப்பாணம் | 10 | 00 |
| டக்றர். K. பொன்னையா, யாழ்ப்பாணம் | 15 | 00 |
| திரு. K. K. சங்கரப்பிள்ளை, பெரியகடை, யாழ்ப்பாணம் | 5 | 00 |
| ,, K. K. கந்தையாபிள்ளை ,, ,, | 5 | 00 |
| ,, V. விசுவலிங்கம் A. G. A. கோவை | 100 | 00 |
| ,, A. S. சங்கரப்பிள்ளை, காரைநகர் | 100 | 00 |
| ,, V. கந்தையா, அராலி தெற்கு (பகுதி) | 10 | 00 |
| ரூ. | 1590 | 00 |

ஏனைய அபிமானிகளையும் தங்கள் தங்களாலியன்ற பணத்தை அனுப்பியனுப்பிவைத்து உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

வி. பொன்னுசாமி,
ஜெனரல் மனேஜர்.

சைவப்பிரகாச யந்திரசாலை,
வண்ணார்பண்ணை.

## ஜெர்மன் சர்வாதிகாரியின் பேச்சு

1ம் பக்கத் தொடர்ச்சி

ரும் திட்டம் தயாரிக்கின்றனர். ஜெர்மனியைப் புனர் நிர்மாணஞ்செய்ய நான் திட்டம் தயாரிக்கிறேன். திருப்பி உதைகொடுக்கும் நேரம் வரும். அமெரிக்கா நமக்குத் தூரத்திலிருந்தாலும், நமது வாசலில் இருக்கும் மற்றநாட்டை நாம் பார்த்துக்கொள்ளுவோம். எதிர்ப்பதற்கு ஜெர்மன் மக்கள் கொண்டிருக்கும் உறுதியைத் தகர்க்கலாமென்று நமது சத்துருக்கள் நம்புகிறார்கள். இது வெறும் பகற்கனவேயாகும். வெடிகுண்டுகளினால் வீடிழந்தமக்கள் லட்சக்கணக்கானோர் பழிவாங்குப்படையின் முன்னணியில் இருப்பார்கள்.......


## கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குக் கீழ்க் கண்ட பொருள்களைச் செய்து கொடுப்பதற்கு இம்மாதம் 22-ந் திகதி திங்கட்கிழமை பகல் 12மணி வரை கேள்விப்பத்திரங்கள் (Tenders) ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் சீல் செய்யப்பட்டு மேலுறையின் வலதுபக்க மூலையில் "மேசை கதிரைக்குரிய கேள்விப்பத்திரம்" என்று குறிக்கப்பட்டு, "பிரதமாசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி" என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்:—

(1) 100 மாணவர்க்குரிய மேசை கதிரைகள்
(2) 1 கரும்பலகை
(3) 50 விடுதிச்சாலைப் படுக்கைகள்

மாதிரிப் பொருள்களும் (Samples) ஏனைய விபரங்களும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் காரியாலயத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

மிகக் குறைந்த விலை கேட்கும் கேள்விப்பத்திரத்தையாவது அல்லது வேறு குறித்த எந்தக் கேள்விப்பத்திரத்தையாவது ஏற்றுக்கொள்ளப் பிரதமாசிரியர் கட்டுப்பட்டவரல்லர்.

(Mis. 158. 8-11-43)

குறைந்த விலையில் துணிகள்
வேஷ்டி துணிகள், அவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.
R. S. M. டெக்ஸ்டைல் ஸ்டோர்ஸ்
மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்
பெரியகடை—யாழ்ப்பாணம்.
K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.
Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 11th November 1943.